[1973 நவம்பர் 23

*336 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முடிந்து உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டை உத்தேச மதிப்பீடு முடிந்த பிறகு தான் கணிக்க இயலும். இருப்பினும் இத் திட்டத்திற்கு உத்தேசமாக முப்பத்தைந்து லட்சம் ரூபாய் ஆகும்.

திரு. த. சோனையா : திருப்புவனம் திட்டத்திற்குப் பரிட்சார்த்தமாகக் கட்டக் கூடிய பணம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாகவே மானாமதுரைக்குப் பணம் கட்டியாகிவிட்டது. ஆனால், இன்னும் அத் திட்டம் நீண்டு கொண்டே இருக்கிறது. ஆகவே இதையாவது உடனடியாகச் செயல்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர்கள் திட்டத்திற்கான பணம் கட்டிவிட்டோம் என்று சொல்லும்போது அந்தத் திட்டத்தையே நிறைவேற்றுவதற்குப் பணம், முழுப் பணமும் கட்டிவிட்டதாக ஒரு தவறான எண்ணம் ஏற்படக்கூடும். இது ஆய்வு வேலை நடைபெறுவதற்கே கட்டப்படுவதாகும். வெற்றிலை பாக்கு வைத்து திருமணத்திற்கு அழைப்பு கொடுத்துவிட்ட காரணத்தினால் சாப்பாடு போட்டு முடிக்கிற செலவும் அதில் அடங்கி விட்டது என்பது பொருள் அல்ல. ஆக ஆய்வு வேலைக்காகக் கொடுக்கப்பட்ட தொகையை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதற்கான முதலீடு பல இலட்சக்கணக்கான ரூபாய், அதைக் குடிநீர் வாரியம் மூலம் மக்களுக்குப் பல்வேறு பகுதிகளில் குடிநீர் கிடைக்கச் செய்வதற்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் செலவிட வேண்டிய நிலை ஏற்படுகிற காரணத்தால் நிதிவசதிகள் இடம் தருவதற்கேற்ப இப்படிப்பட்ட திட்டம் விரைவுபடுத்தப்படும்.